# தென்றல்

யாழ். மாநகர சபை
25 SEP 2023

ஆரம்பம் : 06.04.2008

பதிவு இலக்கம் : 361910

காற்று - 15 | சுகந்தம் - 59 - 60 | ( ஐப்பசி - மார்கழி) 2023




## வைர விழா மலர்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரில் புதுப் பொலிவுடன் லோட்டஸ் மஹால் தங்குமிடம்!

## (LOTUS MAHAL LODG)

**நாளாந்தம்/வாராந்தம்/மாதாந்தம் என AC/NON AC வசதிகளுடன்விற்பனைப் பிரதிநிதிகளுக்கு உகந்ததாக நியாயமான விலையில் வசதியான அறைகள் வாடகைக்குப் பெற இன்றே நாடுங்கள்.**

**இல-61/2, யாட் வீதி,**
**கல்முனை.**



**தொலைபேசி:- 0770165133/ 0760824059**



Email:- *kanthaswamy @gmail.com*
*Free email accounts/Register today at mail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர சபை
25 SEP 2023
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
ரயாழ்ப்பாணம்

**ஆரம்பம் : 06.04.2008**

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே: 0776983597
பெக்ஸ்: 0652227542
**E-Mail** :kirupabatticaloa@yahoo.com
**இணையம்** : www.Thendralbook.com

**ஆசிரியர்/ வெளியீட்டாளர்**
கதிரேசபிள்ளை கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி த. செல்வராணி

**ஓவியம்**
சி.புரவர்த்தனி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர் ( ஆ-ர் )

## உள்ளே..

- "தென்றல்" - "60"......... 01
- "தென்றலின்" வாசனை பரவட்டும்! ஒளிரட்டும்! .... .............................. 02
- "தென்றலே" வாழியவே! .. .............................. 07
- அகவை பதினைந்தில் அறுபதாவது இதழை விரிக்கும் "தென்றல்".... 08
- வாழ்த்துகிறேன்! ......... 09
- உள்ளத்தால் போற்றுகிறேன் உயர்வு பெற்று வாழியவே! ....... 10
- மட்டக்களப்பில் சிற்றிதழ் சாதனை படைத்த "தென்றல்" சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள்! .............. 11
- "தென்றலின்" உயர்வுக்கும் உயர் பண்புக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்! .............................. 12
- அறுபதாவது மலரைப் பிரசவிக்கும் "தென்றல்" வாழ்க! ...................... 14
- "தென்றலே" நீடூழி வாழ்க! .............................. 15
- "வீசுதென்றல்" விருது பெறும் கலைஞர்கள் ஓர் அறிமுகம் ................... 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தென்றல்"- "60"

உங்கள் அபிமானத் "தென்றல்" சஞ்சிகை இன்றைய தினம் தனது சாதனைப் பயணத்தில் "60"- ஆவது இதழை விரித்து இத்தரணியில் காலடி எடுத்து வைக்கிறது.

நாம் இதனை அடைந்து கொள்வதற்கு எம்மோடு என்றும்- எப்போதும் இன்முகத்தோடு பயணித்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்கள், "தென்றலின்" ஆண்டுச் சந்தாதாரர்கள் மற்றும் ஆயுட் சந்தாதாரர்கள், ஊடகவியலாளர்கள், அனுசரணையாளர்களை இவ் வேளையில் எண்ணிப் பார்க்கிறோம்.

ஒருமொழி சார் சஞ்சிகை "59"- ஆவது இதழைக் கடந்து, ஒரு குடும்ப அங்கத்தவராக காலாண்டு தோறும் இடைவிடாது வாசகர்களைச் சென்றடைவது என்பது சாதனைகளின் உச்சமே.

எமது நாட்டில் மட்டுமன்றி, கடல் கடந்துள்ள தமிழ் உறவுகளை வாசகர் எனும் அடையாளத்துடன், மொழி ரீதியாக இணைக்கும் உறவுப் பாலமாக, உணர்வுகளை- உரிமைகளை வெளிக் கொணர உதவும் மேடையாக மொழி உரிமையோடு ஒவ்வொரு சக மனித உணர்வுகளை மதித்து, ஜனநாயகத்தை மேலும் தாங்கிடும் காவற் கோபுரமாக தொடக்கம் முதலே தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையில் உலகை மயமான இன்றைய விஞ்ஞான யுகத்தில் என்றும் பாரம்பரிய மிடுக்குடன் எதனையும் சாதிக்கும் திடமான நம்பிக்கை கொண்ட எம்மோடு ஒன்றாய் என்றும் இணைவாய்ப் பயணிக்கும் வாசகர்கள், நம்பிக்கையுடன் தோள் கொடுக்கும் அனுசரணையாளர்கள், "தென்றலின்"- ஆலோசகராக இருந்து அமரத்துவம் அடைந்துவிட்ட வீ.சு.கதிர்காமத்தம்பி உட்பட அனைவருக்கும் இந்த வளர்ச்சி வெற்றிப் பயணம் சமர்ப்பணம்.

இவ்வாறான காலகட்டத்தில் "தென்றல்"- இன்னும் பல ஆண்டுகள் வளர்ந்து தமிழ் பேசும் மக்களுக்குத் தனது சேவையை வழங்க உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புகளும், நல்லாசிகளும் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றலின்" வாசனை பரவட்டும்! ஒளிரட்டும்!

பருத்தியூர் பால- வயிரவநாதன்

"கிழக்கில் "தென்றல்" வாசனை ஊட்டும்
ஈழத்தில், வெளியுலகில் ஓங்கி ஒலிக்கும்
முதியோர், இளையோர் ரசனை உணர்ந்து
களிப்புடன் வழங்கும் அட்சய பாத்திரம்
இலக்கிய ஈர்ப்பு, உலக அறிவு
"தென்றலின்" சுகம் இதமானது
என்றும் இதன் நாமம் ஒலிக்கும்"

"தென்றல்" இதழின் ஆரம்பம் 06.04.2008 ஆகும். இதனது அகவை பதினைந்தைக் கடந்து தற்போது, பதினாறாவது அகவையில் புகுந்துள்ளது. அத்தோடு அறுபதாவது இதழை இன்று வையகமதில் உங்கள் கரங்களில் தவழ விட்டிருக்கிறது. இது ஒரு நிகரற்ற சாதனை. ஒரு விஷயத்தை மிக இலகுவாகச் செய்து விடுவோம் என அநேகர் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் ஆரம்பத்திலேயே களைத்து, ஒதுங்கி விடுவது உண்டு. இலக்கியம் சார்ந்த இதழ்கள் வெற்றி நடை போடுவது சந்தோஷமான விஷயம்.

இது விடயத்தில் "தென்றலின்" ஆசிரியரும், வெளியீட்டாளருமான உயர்திரு கதிரேசபிள்ளை கிருபாகரன், அவரது இல்லத் தலைவி திருமதி கவிதா கிருபாகரன் அவர்களின் மாறாத உழைப்புடன் செம்மையாகத் "தென்றலுடன்" தங்களை அர்ப்பணிப்புச் செய்தமையை இலக்கிய உலகம் பாராட்டுகிறது.

அதேசமயம் "தென்றலின்" ஆசிரியர் குழுமத்தினரின் உழைப்பும் மகத்தானது. அந்த வகையில் ஆசிரியர் குழுவில் கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை, கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம், கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை, திருமதி கவிதா கிருபாகரன் மற்றும் செல்வி த. செல்வராணி பணியாற்றுகின்றனர். அத்துடன் ஓவியராக செல்வி சி.புரவர்த்தனியும் தனது பங்களிப்பை உரிய வகையில் வெளிப்படுத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் இலக்கிய சேவைக்கும், "தென்றலுடன்" இணைந்த வாசகர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். தமிழ் இலக்கியம் தாரணியில் உயர்ந்தது. மிகவும் பழைமை உடையது.

மேலும் "தென்றலின்" ஆசிரியர் பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும். கதிரேசபிள்ளை கிருபாகரன், அவரது மனைவி இருவருமே ஆசான்கள். இவர்கள் இருவரின் ஆசிரியப் பணியும், இலக்கியப் பணியும் ஒன்றிவிட்டது.

"தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் இளமையிலிருந்தே பத்திரிகைத் துறையுடன் இணைந்தவர். செய்தியாளராக 2000 ஆண்டிலிருந்து கடமைபுரிகின்ற இவர், மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கான ஆறு மாதகாலப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தவருமாவார். இவர்கள் இலக்கியக் குழுவில் மூத்த பத்திரிகையாளரும், மட்டக்களப்பிலிருந்து வெளி வந்த கொண்டல், விடிவானம், தினக்கதிர் பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியருமான வீ.சு.கதிர்காமத்தம்பி மற்றும் முதுபெரும் எழுத்தாளர் இரா.நாகலிங்கம்(அன்புமணி) ஆகியோர் ஆலோசகர் களாகப் பணிபுரிந்துள்ளனர். கே.வாமதேவன், கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம், திருமதி ஸ்ரீதேவி சங்கர், கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை, திருமதி கவிதா கிருபாகரன் ஆகியோரின் முயற்சியுடன், 40 பக்கங்களுடனும், 150 பிரதிகளுடனும் ஆரம்பமான "தென்றல்" 24.09.2011 இல் 530 பிரதிகளுக்கு மேல் வளர்ச்சி கண்டது.

தற்போது இலங்கையில் மட்டுமல்ல. இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் தென்னிந்தியாவிலும் வாசகர்களால் ஈர்க்கப் பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடகசேவை மற்றும் கலை, இலக்கியப் பணியைப் பாராட்டி, அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் ஞாபகார்த்த விருதையும், 2011 ஆம் ஆண்டு உலகத் தமிழ் சிற்றிதழ் சங்க மாநாடு கொழும்பு மாநகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்ற போது. அதில் வைத்து மணவாளன் இலக்கிய விருதையும், 2014 ஆம் ஆண்டில் அகிலன் பவுண்டேசன் நிறுவனத்தினால் கலை, இலக்கியச் சேவைகளைப் பாராட்டி, இந்திய தயாரிப்பாளரும், நடிகரும், இயக்குனருமான கே.பாரதிராஜாவின் கரங்களால் உயர் விருதையும், 2022 ஆம் ஆண்டு லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தால் திறமைக்கான தேடல் விருதையும், கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களகத்தினால் 2021 ஆம் ஆண்டில் சிறந்த சஞ்சிகையாகத் "தென்றல்" தேர்வானமையும் அவரது முயற்சிக்குச் சான்று பகர்கின்றது எனக் கூறினால் அது மிகையாகாது.

தற்போது 50 பக்கங்களுக்கும் மேற்பட்ட பக்கங்களை உள்ளடக்கித் "தென்றல்" காலாண்டு இதழ் வெளிவருகின்றது. கதிரேசபிள்ளை கிருபாகரன் மேற்படி இதழ்கள் ஒவ்வொன்றும் வெளிவந்தவுடன் எனக்கு அனுப்பி வைப்பார். இவை அனைத்துச் சஞ்சிகைகளும் என்னிடம் உள்ளன. எனவே நான் "தென்றலை" வாசித்துப் பத்திரிகையில் எழுதுவேன். தினக்குரல் இந்த விமர்சனங்களை தொடர்ந்து வெளியிட்டமைக்கு எனது நன்றிகள்.

"தென்றலின்" அமைப்பு கவர்ச்சிகரமானது. வண்ணமயமான அட்டைப் படத்தில் இலக்கிய, ஊடக, இசைத்துறை விற்பன்னர்களின் வண்ணப் புகைப்படங்கள் அழகு சேர்க்கும். அத்துடன் கல்வித்துறை சார்ந்த பாடசாலைகளின் நிகழ்வுகள், பாராட்டு விழாக்கள், அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலதரப்பினரைச் சார்ந்தோர்களின் புகைப்படங்கள் ஒவ்வொரு காலாண்டுகளிலும் களம் கண்டு கொண்டிருப்பது கண்கூடு.

இந்நிலையில் "தென்றல்" சஞ்சிகையின் இருபத்தைந்தாவது சிறப்பு மலர் வெளியீடு "தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் 26.04.2014 அன்று மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.மனோகரனும், சிறப்பு அதிதியாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சிரேஷ்ட தயாரிப்பாளர் எஸ்.மோசஸ் உம் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட இருபத்தைந்தாவது சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கொடை வள்ளலுமான சைவப்புலவர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

மேற்படி விழாவில் வைத்து, நாடளாவிய ரீதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பருத்தியூர் பால வயிரவநாதன்- (பருத்தித்துறை), செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர்- (கன்னன்குடா), இ.பாக்கியராசா- (மண்டூர்), தாமரை.செல்வநாயகம்- (வாழைச்சேனை), பாத்திமா முஹம்மத்- (காத்தான்குடி), ஆ.அரசரெத்தினம்- (களுதாவளை) ஆகியோர் "தென்றல்" சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல்விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

"தென்றலின்" எழுத்தாளர்களாக எழுதிக் கொண்டிருப்பவர்களாக ஆறுமுகம் அரசரெத்தினம், பேராசிரியர் செ.யோகராசா, ஆ.மு.சி. வேலழகன், கவிதாயினி ஜெகதீஸ்வரி நாதன், கவிதாயினி வாசுகி குணரத்தினம், மூ.அருளம்பலம், மருதூர் ஜமால்தீன், ஏறாவூர் தாஹிர், ஏ.எல்.எம்.சலீம், மாஸ்டர் சிவலிங்கம், இ.கோபாலபிள்ளை, பேராசிரியர் சபா.ஜெயராசா, பேராசிரியர் மா.செல்வராசா, இ.பாக்கியராசா, பாத்திமா முஹம்மத், தாமரை.செல்வநாயகம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

"தென்றலின்" முதற் பக்கத்தை நோக்கினால் சஞ்சிகை பற்றிய தகவல்கள் காணப்படும். அடுத்து ஆசிரியர் கருத்து, தென்றலின் தேடல், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதிய வரவுகள், நீத்தார் நினைவு, வாசகர் நெஞ்சம், நகைச்சுவை, குட்டிக்கதை எனப் பல விடயதானங்களை அடிக்கடி வெளிக் கொண்டு வரும் "தென்றல்" பரந்து விரிந்து ஆலமரம் போல் அகலக்கால் விரித்து செழிப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

மேலும் "தென்றலின் தேடல்" மிகவும் முக்கியமான விரிந்த பகுதியாகும். சாதனையாளர்கள், விருது பெற்றவர்கள், பொதுநலம் சார்ந்த விடயங்களில் ஈடுபடும் பெரியார்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல பிரிவில் அடங்கியுள்ளவர்களை அவர்களின் புகைப் படங்களுடன், கட்டுரை வாயிலாகவும், பேட்டி மூலமாகவும் வெளிப் படுத்தி "தென்றல்" உன்னதமான பணியினை இவ்வையகத்தில் ஆற்றிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தில் ஆர்வங் கொண்ட வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தல், மூத்த எழுத்தாளர்களை இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்தல், மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தூட்டல், மட்டக்களப்பின் கலை மற்றும் கலாசாரப் பாரம்பரியங்களை வெளிக்கொணர்தல் ஆகிய இலக்கினை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் வாசகர்களுக்கான வேண்டுகோள். தற்போது நாட்டின் நிலை மிகவும் பின் தங்கியுள்ளது. இவ்வாறான காலகட்டத்தில் "தென்றல்" போன்ற சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு வாசகர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் பேருதவியினை நல்க வேண்டும்.

காலம் கனியும் போது "தென்றல்" மாதச் சஞ்சிகையாக மலர வேண்டுமென்பதே அனைவரினதும் பேரவா! இனிவரும் சமூகம் மென்மேலும் முன்னேற வேண்டும். காலமாற்றம் உலகை மாற்றும். நல்லதை மட்டுமே செய்ய வேண்டும்.

"தென்றலுடன் இணைவோம். யாதும் நல்லதற்கே என
உணர்வோமாக..!!!"

## "தென்றலே" வாழியவே!

மட்டு நகரிலிருந்து பல்வேறு தடைகளைத் தாண்டி, எடுத்த கருமத்தை இடைநடுவில் கைவிடாது சாதனைச் சிகரத்தில் அடியெடுத்து வைத்துள்ள "தென்றலின்"- வெற்றிப் பயணத்தில் நானும் ஆரம்ப காலத்தில் பயணித்தவள் என்ற வகையில் பெருமை கொள்கிறேன். இவ்வெற்றிப் பயணம் 70, 80, 90, 100 ... என தொடர இலங்கையில் வாழ்வோர் மட்டுமன்றி, கடல் கடந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது ஆரவினை நல்கிட வேண்டுமென்ற உருக்கமான வேண்டுதலைத் "தென்றலின்"- "60" ஆவது இதழ் வெளியீடு, 50 கலைஞர் கௌரவிப்பு நிகழ்வை ஒட்டி இவ் இதழின் ஊடாக விடுக்கிறேன்.

திருமதி சோபனாகாந்தி புஸ்பாகர்
"தென்றல்" ஆரம்பகால உறுப்பினர், இலண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை பதினைந்தில் அறுபதாவது இதழை விரிக்கும் "தென்றல்"

- எம்.சிவகுமார், ஸ்தாபகர், **"வெற்றி மீடியா"**, கல்லடி.

**கிழக்குவானில் சஞ்சிகைப்புரட்சியை ஏற்படுத்தி, பதினைந்தாவது அகவையில் கால் பதித்திருக்கின்ற "தென்றல் சஞ்சிகை" இன்றைய தினம் அறுபதாவது இதழைப் பிரசவித்திருக்கிறது.**

**ஈழத்தில் சஞ்சிகைகள் புற்றீசல்கள் போல் தோன்றி, பின்னர் வந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்த வரலாறுகள் காலங்காலமாக இடம்பெற்றிருப்பது கண்கூடு.**

**இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் திருப்பழுகாமத்தில் அவதரித்து, காலமாற்றத்தின் காரணமாக கல்லடியில் இருப்பிடமாகிய கதிரேசபிள்ளை கிருபாகரன் என்ற தனி விருட்சத்தால் "தென்றல் சஞ்சிகை" காலாண்டு இதழாக 06.04.2008 இல் ஆரம்பிக்கப்பட்டது.**

**இச்சஞ்சிகை பல்வேறு சவால்களைத் தாண்டிப் புதுப் பொலிவுடன் இலங்கையில் மட்டுமன்றி, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று தமிழின் சிறப்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.**

**இவ்வாறான காலகட்டத்தில் இன்று பதினைந்தாவது அகவையில் அறுபதாவது இதழை விரிக்கும் வேளையில் ஈழத்தில் தமிழுக்குத் தொண்டாற்றிய முத்தான ஐம்பது கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவப்படுத்துகிறது.**

**இவ்வேளையில் "தென்றல் சஞ்சிகை" இன்னும் பல ஆண்டுகள் இத்தரணியில் காலூன்றி, கலை, இலக்கியப் பணியாற்றுவதோடு, ஈழத்தில் தலைசிறந்த பல கலைஞர்களை "வாழும் போதே வாழ்த்தும்" பணியையும் ஆற்றிட வேண்டுமென மனம் திறந்து வாழ்த்துகிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன்!

-மருதூர் ஜமால்தீன்-

கிழக்கின் இதயம் மட்டுநகர்
கல்லடி பதியிலுதித்து நல்
அழகுதமிழில் தென்றலதாய்
அவதரித்துலவிப் பணிசெய்தாய் !

கல்வி கவிதை கட்டுரைகள்
கதைகள் எனப் பல கலைகளென
நல்லோர் பணியைத் தொடராக
நாளும் செய்தாய் தென்றலே நீ !

அறிவுப் பணிகள் புரிவோரை
ஆற்றல் நிறைந்து வாழ்வோரை
செறிவாமிலக்கியம் செய்வோர்க்கு
செகத்திலூக்கம் கொடுக்கின்றாய் !

இத்தரைமீதில் இலக்கின்றி
இயங்கி வாழ்வோருன்வரவால்
சத்தாம் கலையை மதிக்கின்ற
சமூகஆர்வலர் நிறைந்திட்டார் !

அறுபது இதழ்கள் தந்திட்ட
வருடம் பதினைந்து உழைப்பும் நீ
பொறுமை பூண்டு சாதிக்கும்
பணிகள் கண்டு மெச்சுகிறோம் !

இனிய கலைஞர் கிருபாவின்
இலக்கும் முயற்சியும் நீயானாய்
துலங்கி மேலும் பணி புரிய
தூய தென்றலே வாழ்த்துகிறேன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் போற்றுகிறேன் உயர்வு பெற்று வாழியவே!

- கதிரவன் த.இன்பராசா - புதுக்குடியிருப்பு.-

வீசுகின்ற காற்றெல்லாம்
வித விதமாய் வீசுகையில்
பேசுகின்ற காற்றாக
விருப்புடன் கை சேரும்
மாசற்ற செந்தமிழின்
மகத்தான வடிவமாய்
தேசம் புகழ் இதழான
"தென்றல்" நீர் வாழியவே...!

பிறப்புக்கள் ஒவ்வொன்றும்
போராட்டம் மாராட்டம்...
திறவுகோலாய் இருந்து தரும்
திறமைகளோ ஏராளம்
சிறக்க வைக்கும் ஆசானை
சிரம் தாழ்த்தி போற்றுகிறேன்.
பிறப்பின் வலி உணர்ந்த.....
பிள்ளை நான் என்பதினால்!

இல்லை என்று சொல்லுகின்ற
இலக்கியம் இங்கு இல்லை
கொள்ளை இன்பம் கொட்டுகின்ற
கொடை வள்ளல் என்றுள்ளம்
சொல்லுகிற அளவிற்கு...
சுமைகளையே சுகமாக்கி
பல்சுவையைத் தருகின்ற
பணுவல் நீர் வாழியவே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் ஆதரிக்கும்...
அழகு தமிழ் அலங்கரிக்கும்.
இன்முகம் என்றும் உள்ள
இதயங்கள் பல வென்ற
பண்பு நல் பண்பாடும்...
பார்த்தாலே இன்பம் தரும்
"தென்றல்" மட்டும் இல்லை
"தென்றல்" கிருபாவும் அப்படியே....!

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

## மட்டக்களப்பில் சிற்றிதழ் சாதனை படைத்த "தென்றல்" சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள்!

- கோவிலூர் செல்வராஜன், இலண்டன்-

காலாண்டுச் சஞ்சிகையாக வெளிவந்து
கலை இலக்கியத்துக்கு தொண்டாற்றிய
"தென்றலுக்கு" வாழ்த்துக்கள்!

மண்வாசம் சொல்லும் கதைகள்,
கலாசாரம் கடைப்பிடிக்கும் கட்டுரைகள்,
கலைஞர். ஆளுமைகளின் நேர்காணல் என்று
கதம்பமாக வெளிவரும் "தென்றலுக்கு" வாழ்த்துக்கள்!

அறுபதாம் இதழ் வெளியீட்டையும்,
ஐம்பது கலைஞர்கள் கௌரவிப்பையும்
ஒரே மேடையில் அரங்கேற்றும்
"தென்றல்" கிருபாவுக்கு வாழ்த்துக்கள்!

"தென்றலின்" மூலம் மதிப்பளிக்கப்படும்
கலைஞர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!
என்றும் தமிழ் மணம் வீசி
நன்றே "தென்றல்" வெளிவர எனது நல்லாசிகள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றலின்" உயர்வுக்கும் உயர் பண்புக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

- சந்திரகௌரி சிவபாலன் (கௌசி),
தமிழ் வான் அவை நிறுவனர், ஜெர்மனி-

"தென்றல்" தரும் செய்திகள், தென்றலாய் மனதில் தவழ்ந்து வர, தேனருவித் தமிழ்நாதம் ஊற்றெடுக்க, கண்கள் படித்திருக்க, சேர்த்தெடுத்த செய்திகள் தரணியெங்கும் பரவிவர, மட்டக்களப்பு மண்ணின் மகத்தான சஞ்சிகை "தென்றல்" இன்று எண்ணிக்கை 60 தொட்டு நிமிர்கிறது.

அதன் உள்ளடக்க விதைகள் மக்கள் மனதில் பதிந்து நல் எண்ணங்களை விதைக்கின்றது. கிருபாகரன் உள்ளக் கோயிலிலே கட்டிய கோட்டை உயர்ந்த கோபுரமாய் இன்று நிமிர்ந்து நிற்கிறது. அவர் உள்ளம் எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பாய்கிறது.

மட்டக்களப்பு என்ற பெயர் கேட்டாலே மனத்துக்குள் ஒரு குதூகலம் கூத்தாடும். அந்த மண்ணில் இருந்து வரும் சஞ்சிகையின் சிறப்புக்கு அதன் ஆசிரியரின் அயராத உழைப்பே காரணம். நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவையே எதிர்கால சந்ததியினருக்கு சரித்திரம் பேசும். அந்த வகையில் "தென்றல்" தன் பணியைச் சிறப்பாகச் செய்கின்றது.

இதழ்கள் தோறும் ஆற்றல் மிக்க படைப்பாளர்களை அறிமுகப்படுத்தி, மக்கள் மனதில் ஆழமான இடத்தை பதித்திருப்பது மட்டுமல்லாமல், கலைஞர்கள் படைப்பாளிகளை கௌரவித்து மேலும் பெருமை சேர்க்கின்றது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மன்னர்கள், புலமை மிக்கோரை அவையிலே பாட வைத்துக் காவியங்கள் படைக்க வைத்து, அவர்களைக் கௌரவித்து பண முடிச்சுகள் வழங்கிப் பாராட்டிப் பெருமை சேர்த்தனர். அதேபோல் தென்றலின் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு உலகில் பேசப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துதல் என்பது மகத்தான பண்பு, பிறரை வாழ்த்திப் பார் நீ வாழ்த்தப்படுவாய் என்பார்கள். "தென்றல்" சஞ்சிகையாய் அறிவை வழங்குவதுடன் கௌரவிப்பாய் மற்றவைகளை வாழ்த்திப் போற்றும் பண்பையும் கொண்டிருப்பது பாராட்டப்படுகின்றது.

உறங்கிப்பார் கஷ்டம் தெரியும். உழைத்துப்பார் அதிர்ஷ்டம் தெரியும் என்பதுபோல் இன்று உழைப்பின் அதிர்ஷ்டத்தைப் பெற்ற "தென்றல்" இதழ் ஆசிரியர் கிருபாகரன் அவர்களுக்கும் ஆசிரியர் குழுவினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கௌரவம் பெறுகின்ற அனைத்து ஆளுமைகளையும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**ஆண்டுகள் கடந்து சஞ்சிகைப் பணி தொடரட்டும்.**

**வாழ்க வளமுடன்!**

---

அன்பான எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடகவியலாளர் களே உங்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் தடை களைத் தாண்டிப் பயணிக்க உறுதுணையாக இருந்த நீங்கள் எமக்கு தரமான விடயதானங்களை அனுப்பித் "தென்றல்"-இன் தரம் பேண உதவிடுங்கள்.

(ஆசிரியர்)

---

கிழக்கின் விடிவானமாக அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளை இணையம் ஊடாக தவழச் செய்கிறான் உங்கள் "வெற்றி மீடியா" இணைய செய்திச் சேவை.

(ஆசிரியர்)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுபதாவது மலரைப் பிரசவிக்கும்

# "தென்றல்" வாழ்க!!!

- கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

கடலலை தாலாட்டும் மட்டுமா நகரின்
கல்லடியிலிருந்து உதயமாகும்
கன்னித் "தென்றல்" நீ வாழ்க!
திடமுடன் அன்று தென்றலாய் தவழ்ந்து
செந்மிழ்த் தேனை நீ சுமந்து
தேடியெம் கரத்தை வந்தடைந்தாய்!

ஆயிரம் மலர்கள் மலர்ந்தாலும்,
அறுபதாவது உந்தன் மலர் வரை
அகிலத்தில் எதுவும் நிலைத்ததில்லை
தாயினும் மேலாய் நீயின்று
தரணியெல்லாம் தாலாட்டி- இன்பத்
தமிழைச் சுமந்து வருகின்றாய்!

அன்று எங்கள் நாட்டிலே
ஆயிரம் சஞ்சிகைகள் மலர்ந்தன
அனைத்தும் இன்று மறைந்து போயிற்று
"தென்றல்" நீ அறுபதாவது இதழை
தேசமெங்கும் பரப்பும் அதேவேளை
ஆயிரமாயிரம் இதழ் மலர
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

**உங்கள் "தென்றலின்" சந்தாதாரராகி இன்னும்**
**பல சாதனைகள் படைக்க உதவிடுங்கள்.**
**(ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றலே" நீடூழி வாழ்க!

- கஞுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரன்-

மட்டுநகரின் இலக்கிய மகுடமாய்
மங்காப் புகழுடன் எங்கும் தமிழ் பரப்பும்
"தென்றல்" இன்றோடு அறுபதாவது இதழ் கண்டு
கொண்டாடுகிறது வைரவிழா!

நூற்றாண்டு கடந்தும் - பார்
போற்றும் இலக்கிய சஞ்சிகையாய்
நீடூழி காலம் வெளிவர
கோடான கோடி நல் வாழ்த்துகள்!

பொதிகையிலே கால் கொண்ட
வண்டமிழ் "தென்றலாய்"
தேசங்கள் பல கடந்து
தெவிட்டாத தமிழ் இன்பமூட்ட
தித்திப்பாய் என் நல்வாழ்த்துகள்!

"தென்றல்" சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீட்டின் போது கலைஞர் கௌரவிப்புக்காக வழங்கப்பட்ட **"வீசுதென்றல்"** விருதினை எமக்கு வழங்கி பிரதான அனுசரணையாகச் செயற்பட்ட திருமதி சோபனாகாந்தி புஸ்பாகருக்குத் **"தென்றல்"** தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வீசுதென்றல்"- விருது பெறும் கலைஞர்கள் ஓர் அறிமுகம்



01 திரு ஆ.மு.சி.வேலழகன் (திருப்பழுகாமம்) - தனது இடைவிடாத எழுத்தாற்றலால், இலக்கிய உலகில் பேசுபொருளாக மாறி விட்ட உன்னத கவிஞர். இதுவரை 45 நூல்களைப் படைத்துள்ளார். இவ்வாறு பல்வேறு வகைகளில் சமூகப் பணியாற்றி வரும் இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"- யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



02.திரு மூ.அருளம்பலம் (ஆரையம்பதி) - ஆசிரியராக, அதிபராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, நாடகக் கலைஞராக, பாடல் ஆசிரியராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிக்கொணர்ந்து கொண்டிருப்பவர். இதுவரை 11 நூல்களையும், 31 இறுவெட்டுக்களுக்கான பக்திப் பாமாலைகளையும் எழுதியுள்ள இவருக்குத் "தென்றல் சஞ்சிகையின்" உயர் விருதான "வீசுதென்றல் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



03.திரு செ.குணரத்தினம் (அமிர்தகழி) -இலக்கிய உலகில் தனது கவிப் புல ஆற்றலால் பேசுபொருளாகத் திகழ்பவர். தனது தள்ளாத வயதிலும் எழுதிக் கொண்டிருக்கும் எழுத்துலகப் போராளி. இவருக்குத்"தென்றல் சஞ்சிகையின்" - உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04.திரு கா.சிவலிங்கம் (பாலமீன்மடு) - தனது பவள விழா கடந்து, இலக்கிய உலகில் கவிதை, நாடகம், குறுந்திரைப்படங்கள், சிரிகதைகள், பாடல் எனப் பல்வேறு துறைகளில் தனது பன்முக ஆற்றலால் தடம் பதித்த - பதித்துக் கொண்டிருக்கும் கவிஞர் கா.சிவலிங் கத்துக்குத் "தென்றல் சஞ்சிகையின்" - உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



05. திரு இ.நல்லையா (களுதாவளை) - இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளராக, கவிஞராக, சமூக செயற்பாட்டாளராக, சமய ஈடுபாடுடையவராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது திறமையினை வெளிக்காட்டி வரும் இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



06. திருமதி மாலினி அஜந்தன் (யாழ்ப்பாணம்) - யாழ்ப்பாணத்திலிருந்து உலகம் பூராகவும் தமிழின் செழுமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் "டான் தொலைக்காட்சி"-யின் செய்தி ஆசிரியராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், செய்தி வாசிப்பாள ராகவும் பல்வேறு உன்னத பணிகளை தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றிவரும் திருமதி மாலினி அஜந்தனுக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



07. திரு சீ.கோபாலசிங்கம் (வெல்லாவெளி) - கவிஞராக, விமர்சகராக, சமூக செயற்பாட்டாளராகத் தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறார். இதுவரை சுமார் 19 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள வெல்லவூர்க் கோபாலுக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



08. திருமதி ஜெகதீஸ்வரி நாதன் (தம்பிலுவில்) -ஓய்வு பெற்ற ஆசிரியையாக, கவிஞராக தமிழ் கூறும் நல்லுலகில் வலம் வருபவர். ஓசை நயம்மிக்க மரபுக் கவிதையில் தன்னைப் பிணைத்துக் கொண்ட தம்பிலுவில் ஜெகாவின் கலை, இலக்கியப் பணியைப் பாராட்டித் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



9. திரு மா.திருநாவுக்கரசு (குருக்கள்மடம்) - மட்டக்களப்பு மாநிலத்தில் "குருவூரான்" - எனும் புனைபெயரில் உலாவரும் இவர், ஊடகவியலாளராக, எழுத்தாளராக, சமூகச் செயற்பாட்டாளராக, சமயநெறி வளர உழைப்பவராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர். இவரால் வெளி யிடப்பட்ட "மட்டக்களப்பின் மாண்புறு குருக்கள்மடம் எனும் பேரூர்" - இவரது எழுத்தாற்றலின் திறவுகோல் எனக் கூறினால் அது மிகையாகாது. இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10. திரு மீரா முகைதீன் ஜமால்தீன்(ஏறாவூர்) - கலை, இலக்கியம், சமயம், சமூகம் எனப் பல்வேறு துறை களில் அகலக்கால் பதித்து, இதுவரை 12 நூல்களை அச்சுவாகனம் ஏற்றி, தன் ஆற்றலை வெளி உலகுக்குப் புடம் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



11. திருமதி இந்திராணி புஸ்பராஜா (கல்லடி) - முன்னாள் ஆசிரியராக, விஞ்ஞான சேவைக்கால ஆலோசகராக, பிரதி அதிபராக, அதிபராக, எழுத்தாளராக, சமய - சமூகச் செயற்பாட்டாளராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை மீன்பாடும் தேனாட்டில் வெளிப் படுத்திக் கொண்டிருப்பவர். இவர் இதுவரை 09 நூல் களை எழுதி வெளியிட்டுள்ளார். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



12. திரு பரதன் கந்தசாமி (கல்முனை) - கல்முனை மாநகரிலிருந்து கலை, இலக்கியம், கல்வி எனப் பல்வேறு துறைகளிலும் தனது அதீத ஆற்றலால் பேசுபொருளாக மாறி விட்டவர். கல்முனைத் தமிழ்ச் சங்கத்துக்கு உயிர் கொடுத்து, பல்வேறு இலக்கிய நிகழ்வுகளைச் சமூகம் சார்ந்து நடாத்திக் கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13. திருமதி வேதநாயகி குணநாயகம் (களுதாவளை)- முன்னாள் ஆசிரியராக, உதவிக்கல்விப் பணிப் பாளராக, கலை- இலக்கியவாதியாக, சமூக - சமய செயற்பாட்டாளராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



14. திரு தி.பத்மநாதன் (திருப்பழுகாமம்) - 1969 இல் "நாதன்ஸ் இசைக்குழு" - வை ஆரம்பித்து, அதன் மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்திலும், மாவட்டம் கடந்தும் பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நடாத்தி,இசை இரசிகர்களையும் தன்னகத்தே கவர்ந்த பெருமை கொண்ட தி.பத்மநாதனுக்குத் "தென்றல் சஞ்சிகை"யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



15. திரு செ.துரையப்பா (துறைநீலாவணை) - கடந்த 27 வருடங்களுக்கும் மேல் யோகாவை இலவசமாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு மட்டு மன்றி, மாவட்டத்தைக் கடந்தும், நாடு கடந்து வாழ்வோருக்கும் போதித்து வரும் பிரபல யோகா சிகிச்சை நிபுணரான செ.துரையப்பாவுக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16. திரு பெ.பேரின்பராசா (செட்டிபாளையம்) - இந்து நாகரீக பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்கும் வகையில் எளிய முறையில் ஊட்டுவதோடு, பல கட்டுரைகளைச் சமயம் சார்ந்தும், நடைமுறை வாழ்வு சார்ந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரித்து அறக் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



17. திரு த.கோபாலகிருஸ்ணன் (காரைதீவு) - "செங்கதிர்" - சஞ்சிகையை பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிக் கொணர்ந்து கிழக்கில் சஞ்சிகைப் புரட்சியை ஏற்படுத்தியவர். அத்தோடு வருடா வருடம் கற்புக்கரசியாம் கண்ணகைக்கு விழா எடுத்து எமது கலாசாரப் பெருமைகளை வெளிக் கொணரும் செங்கதிரோனுக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



18. திரு வீ.வீரசொக்கன் (உடப்பு) - ஊடகம், இலக்கியம், சமயம், பொதுத்துறை ஆகியவற்றில் அகலக்கால் பதித்து, அமைதியுடனும், அடக்கத்துடனும், நேயப் பண்டனும் அளப்பரிய பங்காற்றி வருபவர். இதுவரை 20 நூல்களை யாத்துள்ள வீரசொக்கனுக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19. தம்பி சாகித் சித்தி பரிதா (சிலாபம்) - இன ஒற்றுமைக்கும், இன சௌபாக்கியத்துக்கும் பெயர் பெற்ற சிலாபத்தில் ஆன்மீக எழுத்துத் துறையிலும், கவிதை புனைவதிலும் தனக்கெனத் தனியான பாதையினை வகுத்துக் கொண்டு எழுத்துத் துறையில் பிரகாசித்து வரும் தம்பி சாகித் சித்தி பரிதாவுக்குத் "தென்றல்" சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" பெருமை கொள்கிறது.



20. திரு தி.சத்தியநாதன் - ( திருப்பழுகாமம்) 1969 களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமன்றி, மாவட்டம் கடந்தும் பல்வேறு இசை நிகழ்ச்சிகளை "நாதன்ஸ் இசைக்குழு"-மூலமாக நடாத்தி, பெருமை சேர்த்தவர். தற்போது கனடா நாட்டிலும் பல இசை நிகழ்ச்சிகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



21. திரு மி.அருள்மொழிராஜா (நிலாவெளி) - தனது கவித் திறமையை உள்ளூரில் உள்ள வானொலிகளில் மட்டுமன்றி, சர்வதேச வானொலிகளிலும் நேரடியாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர். கவிதை, சிறுகதை எனப் பல பரிமாணங்களில் உயரிய விழுமியப் பண்புகளை பேசுபொருளாகக் கொண்டு செயற்பட்டு வரும் உன்னதமான கலைஞருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



22. கவிஞர் ஏறாவூர் தாஹிர் (ஏறாவூர்) - கவிதைத் துறையில் தனக்கெனத் தனித்துவமான இடத்தை வகிக்கும் உன்னதமான கலைஞர். தனது கவித்துவ ஆற்றலால் பலரையும் தன்வசப்படுத்தும் கவிஞருக்குத் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசு தென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



23. திரு.எஸ்.இரவீந்திரன் (மட்டக்களப்பு) - ஓவியத் துறை ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராகப் பணி புரிந்து பல ஓவியக் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். பல்வேறு நிறுவனங்கள் வெளி யிடும் மலர்களுக்கான அட்டைப் படங்களைப் புதுப்புது நுட்பங்களுடன் வரைந்து பாராட்டைப் பெற்றவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



24. முகம்மதுலெவ்வை முகம்மது பாறூக் (பாலமுனை) - கவிதை, குறுங்காவியம், குறும்பாக்கள் எனப் பல்துறைகளிலும் அகலக்கால் பதித்து இலக்கியப்பணி புரிந்து வருகிறார். இதுவரை 09 நூல்களை வெளியிட்டு தன்னை இலக்கிய உலகில் அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25. திரு எஸ்.தியாகராஜா (களுதாவளை) - ஊடகத் துறையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உரிய ஆதாரங்களோடு எழுதிக் கொண்டிருப்பவர். இவ்வாறான ஊடகப் போராளிக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



26. திரு க.ரெட்ணையா (கன்னன்குடா) - கவிஞராக, பாடல் ஆசிரியராக எனப் பல பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிக்கொணர்ந்துள்ளார். இவரால் எழுதப்பட்ட 10 மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. அத்தோடு 300க்கும் மேற்பட்ட கவிதைகள் பல முன்னணிப் பத்திரிகைகள், சஞ்சிகைளில் வெளிவந்துள்ளன. இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



27. திருமதி சுந்தரமதி வேதநாயகம் (கல்லடி) - கவிதை, சிறுகதை, நூலாக்கம், நாடகம், ஆசிரியப்பணி எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலைத் தமிழ்கூறும்நல்லுலகுக்காக ஆற்றிக்கொண்டிருப்பவர். இவர் இதுவரை 03 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



28. திரு விஸ்வநாதன் பத்மசிறி (ஆரையம்பதி) - ஊடகவியலாளராக, பாடகராக எனப் பல பரிமாணங்களில் தனது ஆற்றலை சமூகத்துக்காக வழங்கிக் கொண்டிருப்பவர். இதுவரை 77 பக்திப் பாமாலைகளைப் பாடியுள்ளார். இவை இறுவட்டுக்களாக வெளிவந்துள்ளன. இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



29. ஆத்மராஜா றூத் சந்திரிக்கா (கோட்டைக்கல்லாறு) - தனது ஆற்றலை சிறுகதை, சமூக செயற்பாடு போன்றவற்றின் ஊடாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர். இலங்கையின் முன்னணிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இதுவரை 01 சிறுகதை நூலை வெளியிட்டுள்ளார். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசு தென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



30. திரு.ம.ஹரிச்சந்திரா (மட்டக்களப்பு) - ஊடகத்துறை, அறிவிப்புத்துறை எனப் பல்துறை விற்பன்னராகச் செயற்பட்டுத் தமிழ் கூறும் நல்லுலகில் பேசுபொருளாகச் செயற்படுபவர். "தென்றல் சஞ்சிகை"-யின் பல்வேறு விழாக்களுக்கும் தனது இனிய குரலால் புதுமெருகேற்றி சிறப்படையச் செய்து கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



31. திரு வா.கிருஷ்ணகுமார் (பெரியகல்லாறு) - ஊடகத் துறையில் தன்னிகரற்றுச் செயற்படுபவர். மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவர். மட்டு. மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் உடனுக்குடன் அச்சு மற்றும் இலத்திரனியல், இணையம் ஆகிய ஊடகங்களில் தவழ விடும் ஆற்றல் கொண்ட இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



32. திரு சீனித்தம்பி தரணீஸ்வராநந்தா (மட்டக்களப்பு) - இவர் ஏறாவூரில் அவதரித்து ஆசிரியராக, அதிபராக, கலை இலக்கியவாதியாக எனப் பல பரிமாணங்களில் வலம் வந்து கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல்" - விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



33. திரு மா.சசிக்குமார் (கன்னன்குடா) - ஊடகத் துறையில் போர்க்காலச் சூழல், ஆழிப்பேரலை அனர்த்தங்களின் போது இவரின் செய்தி சேகரிப்புக்கள் மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது. இவ்வாறு பணிபுரிந்த இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



34. அனோஜா பவளேந்திரன் (களுவாஞ்சிகுடி) - கவிதை, சிறுகதை எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையம் ஆகியவற்றில் வெளியிட்டுக் கொண்டிருக் கிறார். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை" - யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"-வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



35. செல்வி சி.புரவர்த்தனி (குறிஞ்சாமுனை) - "தென்றல் சஞ்சிகை" - யில் வெளிவரும் அனைத்து சிறுகதைகளுக்குமான படங்களை தனது நுட்பமான ஓவியத் திறமையால் புதுப் பொலிவு பெறச் செய்து கொண்டிருப்பவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகை"- யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



36. திரு.எம். சிவகுமார் (கல்லடி) - இவர் தனது புகைப்பட நுட்பத்தினால் பல்லாயிரக்கணக்கான புகைப்படங்களை உயிரோட்டமாக - தத்ரூபமாக வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கிறார். அத்தோடு "வெற்றி மீடியா" எனும் இணையத்தளத்தினை ஆரம்பித்து, மட்டக்களப்பின் கலை, கலாசார, பண்பாட்டம்சங்களை ஊரறிய, நாடறிய, உலகறியச் செய்து கொண்டிருக்கிறார். இவ்வாறான உன்னத கலைஞருக்குத் "தென்றல்" - சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல்"- விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



37. செல்வன் ம.புருஷோத்தமன் (திருப்பழுகாமம்) - "நேத்ரா தொலைக்காட்சி" நடத்திய ராகமேடைப் பாடல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர். மட்டு. நகரிலுள்ள பல இசைக்குழுக்களுடன் இணைந்து பல பாடல்களைப் பாடியுள்ளார். அத்தோடு "தென்றல் சஞ்சிகையின்" கீதத்தை தன் வசீகரக் குரலால் புதுப் பொலிவு பெறச் செய்திருக்கிறார். இவ்வாறாக இசைத் துறையில் சாதனைகள் பல புரிந்து கொண்டிருக்கும் மருத்துவபீட மாணவன் ம.புருஷோத்தமனுக்குத் "தென்றல்" சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" பெருமை கொள்கிறது.



38. திரு சதாசிவம் மதன் (புதுக்குடியிருப்பு) - "கவிஞன்"- எனும் கவிதைக்கான சஞ்சிகையை வையகமதில் தவழ விட்டு கலை இலக்கியத் துறைக்கு அளப்பரிய பங்களிப்பினை நல்கியவர். இவருக்குத் "தென்றல் சஞ்சிகையின்" - உயர் விருதான "வீசுதென்றல் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



39. திரு தங்கராசா இன்பராசா (புதுக்குடியிருப்பு) - புதுக்குடியிருப்பிலிருந்து "கதிரவன்" - என்ற பெயரில் பல்வேறு அமைப்புக்களை நிறுவி கலை, இலக்கியம் வளர வித்திட்டுக் கொண்டிருப்பவர். "கதிரவன்" சஞ்சிகையை வெளிக் கொணர்ந்த இவருக்குத் "தென்றல்" - சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



40.திரு கிறிஸ்டிராஜ் (கல்லடி) - ஊடகத் துறையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தனது ஊடகப் பணியைச் செவ்வனே ஆற்றிக் கொண்டிருப்பவர். துடிப்பாக, உடனுக்குடன் செய்திகளை வழங்கி வரும் இவருக்குத் "தென்றல்"- சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



41. ஏ.எல்.எம்.சலீம் (நிந்தவூர்) - ஊடகத் துறையில் பல்வேறு சாதனைகள் புரிந்த- புரிந்து கொண்டிருக்கும் இவர், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்து இன நல்லுறவுக்கு வித்திட்டுள்ளார். பல இளைய ஊடகவியலாளர்கள் ஊடகப் பணிக்குள் பிரவேசிக்க அடித்தளம் இட்டுக் கொடுத்துள்ளார். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய ஊடகர் ஏ.எல்.எம்.சலீமுக்குத் "தென்றல் சஞ்சிகையின்" உயர் விருதான "வீசுதென்றல்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" பெருமை கொள்கிறது.



42.திரு எஸ்.பகீரதன் (மட்டக்களப்பு) - இவர் தனது புகைப்பட நுட்பத்தினால் பல்லாயிரக்கணக்கான புகைப்படங்களை உயிரோட்டமாக - தத்ரூபமாக வெளிக் கொணர்ந்து கொண்டிருக்கிறார். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் கலை, கலாசார, அரசியல், பொருளாதாரச் செய்திகளைத் துல்லியமாக ஊடகங்களுக்கு போர்க்காலம் முதல் இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கிறார். இவருக்குத் "தென்றல்" - சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல்" - விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



43. திரு.உதயகுமார் உதயகாந் (மட்டக்களப்பு) - போர்க்கால அனர்த்தங்களிலிருந்து இன்று வரை ஊடகத் துறையில் அகலக்கால் பதித்து, உண்மைச் செய்திகளை மக்களுக்கு வழங்குவதில் அளப்பரிய பங்காற்றி வரும் உதயகாந்துக்குத் "தென்றல்"- சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



44. திரு குழந்தைவேல் கோடீஸ்வரன் - கிழக்கில் சினிமாத்துறை வளர அயராது உழைத்துக் கொண்டிருக்கும் மகத்தான கலைஞர். இதுவரை 19 நம்நாட்டுத் திரைப்படங்களைத் தனது இயலுமைக் குட்பட்டு பிரசவம் செய்துள்ளார். இத்தகைய உன்னத கலைஞருக்குத் "தென்றல்" - சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல்"- விருது வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்" - பெருமை கொள்கிறது.



45. செல்வன் தேவதாசன் லோகவியாசன் - இசைத் துறையில் கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் வரை சென்று கிழக்கு மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவருக்குத் "தென்றல்"- சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



46. திரு குகராசு சுபஜன் - சவால்கள் நிறைந்த ஊடகத் துறையில் துடிப்புடனும், அர்ப்பணிப்புடனும் பணி புரிந்து வரும் உன்னதமான ஊடகப் போராளி. மட்டக்களப்பின் நாலாபக்கமும் இடம்பெறும் செய்திகளை சக்தி தொலைக்காட்சி மூலம் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்குக் கொண்டு செல்பவர். இத்தகைய ஊடகரின் சேவையைப் பாராட்டித் "தென்றல்" - சஞ்சிகையின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



47. திரு க.பாக்கியராஜா (தொழிலதிபர், அபிராமி ஜுவல்ஸ், ஆரையம்பதி ) "தென்றல் சஞ்சிகை"- தொடர்ந்து வெளிவர அனுசரணையாளராக என்றுமே எம்மோடு இணைந்து செயற்படுபவர். இவர் போன்ற அனுசரணையாளர்களாலே தான் "தென்றல்" தொடர்ந்து வெளிவந்து, பொன்விழா மலரை விரித் துள்ளது. எனவே இவருக்கு அனுசரணையாளர் என்ற வகையில் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது"- வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"-பெருமை கொள்கிறது.



48. திரு த.மதியழகன் - (தொழிலதிபர், லக்ஷனா ஸ்டாம்ப் அன்ட் டிஜிட்டல், அரசடி,மட்டக்களப்பு.) "தென்றல் சஞ்சிகை" - தொடர்ந்து வெளிவர அனு சரணையாளராக என்றுமே எம்மோடு இணைந்து செயற்படுபவர். இவர் போன்ற அனுசரணையாளர் களாலே தான் "தென்றல்" - தொடர்ந்து வெளிவந்து, பொன்விழா மலரை விரித்துள்ளது. எனவே இவருக்கு அனுசரணை யாளர் என்ற வகையில் "தென்றல் சஞ்சிகை"-யின் உயர் விருதான "வீசுதென்றல் விருது" - வழங்கிக் கௌரவிப்பதில் "தென்றல்"- பெருமை கொள்கிறது.



49. திரு மு.விஸ்வநாதன் - (சொர்ணம் நகை மாளிகை, மட்டக்களப்பு, கல்முனை, களுவாஞ்சிகுடி) "தென்றல் சஞ்சிகை"- தொடர்ந்து வெளிவர அனுசரணையாளராக என்றுமே எம்மோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து செயற்படுபவர். இவர் போன்ற அனுசரணையாளர் களாலேதான் **"தென்றல்"** - தொடர்ந்து வெளிவந்து, பொன்விழா மலரை விரித்துள்ளது. எனவே இவருக்கு அனுசரணையாளர் என்ற வகையில் **"தென்றல் சஞ்சிகை"** - யின் உயர் விருதான **"வீசுதென்றல் விருது"** - வழங்கிக் கௌரவிப்பதில் **"தென்றல்"** - பெருமை கொள்கிறது.



50. **திரு வி.றஞ்சிதமூர்த்தி** (மட்டக்களப்பு) - அனுசர ணையாளர்களின் பங்களிப்பில்லாமல் சிற்றித ழொன்று அறுபதாவது இதழை அண்மிப்ப தென்பது முடியாத காரியம். அந்த வகையில் உங்கள் அபிமானத் **"தென்றல்"** - சஞ்சிகை இவ்வரலாற்றுச் சாதனையைப் படைக்க உந்து சக்தியாகச் செயற்பட்டு வரும் பிரபல வர்த்தகரும், மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவரும், சைவப் புரவலருமான விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்திக்குத் **"தென்றல்"** - சஞ்சிகையின் உயர் விருதான **"வீசுதென்றல்"** - விருது வழங்கிக் கௌரவிப்பதில் **"தென்றல்"**- பெருமை கொள்கிறது.




இலங்கையில்
மட்டுமன்றி, கடல்
கடந்து பல்வேறு
ஐரோப்பிய நாடுகளிலும்,
வாழும் எமது அன்பான
உறவுகளிடமிருந்து தரமான
கட்டுரைகள், கவிதைகள்
மற்றும் சிறுகதைகள்
எதிர்பார்க்கப்படுகின்றன.
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூ
யாழ்ப்பாணம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org